# நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கான அறிவித்தல்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்.

வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்புக்கள் தொடர்பாக நம்பிக்கைப் பொறுப்பாளர்களினால் பராமரிக்க வேண்டிய தகவல்கள்

2018 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்புக்கள் (திருத்தச்) சட்டம் மற்றும் 2019 ஆம் ஆண்டு சனவரி 28 ஆம் திகதிய இலக்கம் 2108/10 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2019 ஆம் நம்பிக்கைப் பொறுப்பு கட்டளைகளுக்கு (வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்புகளுக்கான தகவல்கள்) அடிப்படையில் நம்பிக்கைப் பொறுப்பொன்றினை உருவாக்கும் போது நம்பிக்கை பொறுப்பாளர்களால் கீழ் குறிப்பிட்டுள்ள தகவல்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் பராமரித்துச் செல்லல் வேண்டும்.

1) நம்பிக்கைப் பொறுப்பிற்கான விபரங்கள்

- நம்பிக்கைப் பொறுப்பின் பெயர்
- நம்பிக்கைப் பொறுப்பின் முகவரி
- நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கம்
- நம்பிக்கைப் பொறுப்பு உள்ளடக்கப்படும் மாவட்டம் மற்றும் காணிப்பதிவகம்.

2) நம்பிக்கைப் பொறுப்பின் ஸ்தாபகர், நம்பிக்கை பொறுப்பாளர்கள், சக பொறுப்பாளர்கள் தொடர்பான விபரங்கள்.

- பெயர்
- முகவரி
- தேசிய அடையாள அட்டை இலக்கம்

3) பயன்பெறுனர், பயன்பெறுனர்கள், பயன்பெறுனர்களின் வகுப்பு

- பெயர்
- முகவரி
- தேசிய அடையாள அட்டை இலக்கம்

4) மேலே 2 அல்லது 3 இல் குறிப்பிடப்படாத ஆனாலும் நம்பிக்கைப் பொறுப்பொன்றினை உருவாக்குவதற்கு பங்களிப்பு வழங்கும் ஏனைய நபர்கள் (உப அங்கத்தவர்கள், சட்ட அங்கத்தவர்கள், முகாமையாளர்கள். முதலீட்டு ஆலோசகர்கள், வரி ஆலோசகர்கள். கணக்காளர்கள்)

5) சட்ட நபரொருவரின் பொருள்நயத்திற்காக நம்பிக்கைப் பொறுப்பொன்றினை உருவாக்கியிருக்கும் பட்சத்தில் அப்பொறுப்பின் பொருள்நய உரிமையாளர்களான இயற்கை நபர்கள்.

6) உரிய நம்பிக்கைப் பொறுப்பின், நம்பிக்கை பொறுப்பாளர்கள் அத்தகவல்களை மூன்று மாதங்களுக்கொருமுறை இயலுமானவரை சரிபார்த்து இற்றைப்படுத்தல் வேண்டும்.

7) ஏதேனும் அசையும் அல்லது அசையா சொத்து தொடர்பாக வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்பின், நம்பிக்கைப் பொறுப்பாளரால் மேலே குறிப்பிட்ட அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட III ஆவது அட்டவணையில் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பதிவு செய்வதற்காக பொறுப்பாவணத்தின் மூலப்பிரதியுடன் காணிப்பதிவாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

பதிவாளர் நாயகம்

***மேலதிக தகவல்களுக்காக விசாரிக்கவும்***

***உதவி பதிவாளர் நாயகம் (நொத்தாரிசு பிரிவு)***
***பதிவாளர் நாயகம் திணைக்களம்***
***இலக்கம் 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை***
***தொலைபேசி இலக்கம் - 0112889024/0112889496***